# நிலக்கடலைக்கு நல்ல விலை கிடைக்கும்

வேளாண் அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய அறிவிப்பின் படி, 2015-16 ஆம் ஆண்டில் நிலக்கடலை 44.6 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 68.86 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. குஜராத், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகியவை நிலக்கடலை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் நிலக்கடலை 2.17 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5.43 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளுர் மற்றும் கடலூர் ஆகியவை நிலக்கடலை உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

2014-15 ஆம் ஆண்டில் இந்தியா 7.88 இலட்சம் டன்கள் நிலக்கடலை ஏற்றுமதி செய்துள்ளது மாறாக 2015-16 ஆம் ஆண்டு 5.36 இலட்சம் டன்கள் மட்டுமே ஏற்றுமதி செய்துள்ளது. இந்திய எண்ணெய் வித்து ஏற்றுமதி மேம்பாட்டு மையத்தின் படி, வியட்நாமில் நிலக்கடலையின் இறக்குமதிக்கு போடப்பட்ட தடையாலும் உள்நாட்டு சந்தையில் நிலக்கடலையின் விலை உயர்வாலும் 2015-16 ஆம் ஆண்டில் நிலக்கடலை ஏற்றுமதி 32 சதவிகிதம் குறைந்துள்ளது.

இந்தியாவில் நிலக்கடலையின் பரப்பளவு குறைந்துள்ளது. நாட்டின் நிலக்கடலை உற்பத்தியின் பெரும் பகுதி குஜராத் மாநிலம் வகிக்கின்றது ஆனால் தற்போது பருவ மழை தள்ளிபோனதால் நிலக்கடலையின் பரப்பளவு குறைந்துள்ளது. ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலத்திலும் நிலக்கடலையின் பரப்பளவு குறைந்துள்ளது. சாதகமற்ற பருவநிலை காரணத்தால் ஏற்பட்ட நிலக்கடலையின் உற்பத்தி குறைவு 15 சதவிகிதம் விலையேற்றத்திற்கு காரணமாகும். சென்ற ஆண்டைக்காட்டிலும் தற்போது கடலை எண்ணெய் தேவை அதிகரித்துள்ளது எனவே நிலக்கடலைக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், கடந்த 13 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய நிலக்கடலையின் விலையை

ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் அறுவடையின்போது நிலக்கடலையின் பண்ணை விலை செப்டம்பர்-அக்டோபர், 2016-ல் கிலோவிற்கு ரூ.60-65 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*

*கோயமுத்தூர்-641 003.*

*தொலைபேசி - 0422-2431405*

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

*பேராசிரியர் மற்றும் தலைவர்,*

*எண்ணெய் வித்துக்கள் துறை,*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*

*கோயமுத்தூர்-641 003.*

*தொலைபேசி - 0422- 2450812*